இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2021/2022

இறுதிப்பரீட்சை - 2023

**STP 8209/STP8308/ESP2108 – கல்வி முகாமைத்துவம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 09.12.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

- பகுதி I இன் சகல வினாக்களுக்கும் பகுதி II இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி – I

1. "முகாமைத்துவம் ஒரு நோக்கத்துடன் கூடிய செயற்பாடு என்பதுடன் அது முன்கூட்டியே நிர்ணயித்து கொள்ளப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதனை நோக்கி ஒரு குழுவினரை நெறிப்படுத்தும் முயற்சியாகும்." முகாமைத்துவம் பற்றிய எண்ணக்கருவினை பொருத்தமான உதாரணத்துடன் விளக்குக.

2. "கல்வி நிறுவனங்களின் தனியாட்கள் மற்றும் குழுக்களின் சிறந்த பெறுபேறுகளுக்கு வினைத்திறன்மிக்க முகாமைத்துவம் அத்தியாவசியமானதாகும்." இக்கூற்றினை மூன்று (03) உதாரணங்களின் துணையுடன் சுருக்கமாக விளக்குக.

3. பாடசாலை சூழமைவுடன் தொடர்புபட்ட பொருத்தமான உதாரணங்களின் துணையுடன் "உள்வாரி மற்றும் வெளிவாரியான வினைத்திறன்" என்பவற்றை வேறுபடுத்துக.

4. "ஒழுங்கமைப்புக்கள் திறந்த முறைமைகளாகக் கருதப்படுவதோடு அவை அவற்றின் சூழலால் தாக்கத்திற்கு உள்ளாகின்றன." முகாமைத்துவம் பற்றிய முறைமைக் கோட்பாட்டினை எவ்வாறு ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படும் பாடசாலையின் விளைதிறனை மதிப்பீடு செய்வதற்குப் பிரயோகிக்க முடியும் என சுருக்கமாக விளக்குக.

5. "பாடசாலையொன்றின் அதிபர் விளைதிறன்மிக்க கல்வி அபிவிருத்தித் தலைவர் மற்றும் மாற்ற முகவர் ஆகக் கருதப்படுகின்றார்." விளைதிறன்மிக்க அதிபர் ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய தலைமைத்துவப் பண்புகள் ஐந்தினைப் (05) பட்டியற்படுத்துக.

6. "தேசிய மட்டத்தில் கல்வி அமைச்சானது கல்வி முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவுள்ளது." இலங்கை கல்வி அமைச்சின் மூன்று (03) பிரதான கடமைகளைக் குறிப்பிடுக.

7. "பாடசாலையொன்று தனது நோக்கங்கள் அனைத்தையும் அடைந்து கொள்ளும் போது அது விளைதிறன்மிக்க பாடசாலையென அழைக்கப்படுகின்றது." தேசிய கல்வி ஆணைக்குழு முன்வைத்துள்ள விளைதிறன் மிக்க பாடசாலையொன்றினை இனங்காண்பதற்கு உதவும் நான்கு (04) குறிகாட்டிகளைக் குறிப்பிடுக.

8. "கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் விளைதிறனை மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு செய்வதற்கான உபாயங்களை மேற்பார்வை வழங்குகின்றது." பாடசாலையின் மேற்பார்வையினை திட்டமிடும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அடிப்படைக் கொள்கைகள் ஐந்தினைக் (05) குறிப்பிடுக.

(5 x 8 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9.

**i.** ஒழுங்கமைப்பு என்பதால் நீங்கள் கருதுவது யாது?

**(04 புள்ளிகள்)**

**ii.** ஒழுங்கமைப்பொன்றின் இலட்சிய நோக்கு மற்றும் பணிக்கூற்று என்பவற்றை வேறுபடுத்துக.

**(06 புள்ளிகள்)**

**iii.** எந்தவொரு ஒழுங்கமைப்பும் தனது வெற்றிகளை அடைந்து கொள்வதற்கு நிறைவு செய்ய வேண்டிய **மூன்று** (03) அம்சங்களை முன்வைத்து அவற்றில் ஒன்றினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

10. "திட்டமிடலானது முகாமைத்துவ தொழிற்பாடுகளில் முதலாவதாகவும் முக்கியமானதாகவும் கருதப்படுவதுடன் ஏனைய முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்கான அடிப்படையானதாகவும் கருதப்படுகின்றது"

**i.** திட்டமிடல் என்பதனால் நீங்கள் கருதுவது யாது?

**(04 புள்ளிகள்)**

**ii.** திட்டமிடல் செயன்முறையினை சுருக்கமாக விளக்குக.

**(08 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை மட்டத்தில் திட்டமிடலாளர்கள் எதிர்நோக்கும் திட்டமிடல் செயன்முறையோடு தொடர்புபட்ட எழுவினாக்கள் அல்லது சவால்கள் **மூன்றினைக் (03)** குறிப்பிட்டு அவற்றினை இழிவளவாக்குவதற்கு அல்லது முகங்கொடுப்பதற்கான ஆலோசனைகளையும் முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**

11.

**i.** "பழைமையான ஒழுங்கமைப்பு கோட்பாடுகள் உற்பத்தி மற்றும் ஊழியர்களின் சம்பளம் ஆகியவற்றில் கூடுதலான கவனத்தினையும் ஊழியர்களின் உளச்சமூகத் தேவைகளில் குறைந்தளவிலான கவனத்தினையும் செலுத்தியுள்ளது" இக்கூற்றினை நியாயப்படுத்துக.

**(05 புள்ளிகள்)**

**ii.** பிளேக் மற்றும் மவுட்டன் முன்வைத்துள்ள முகாமைத்துவம் சட்டகத்தினை விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** பிளேக் மற்றும் மவுட்டன் ஆகியோர் முன்வைத்துள்ள முகாமைத்துவச் சட்டகத்திற்கு அமைவாக "9,9" (அணி முகாமைத்துவம்) எனும் பாங்கு நல்ல முகாமையாளர் ஒருவருக்கான சிறந்த முகாமைத்துவ பாங்காகும். இத்தகைய பாங்கினைக் கொண்ட முகாமையாளர் ஒருவரின் **ஐந்து (05)** வகிபாகங்களைக் குறிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

12.

**i.** கல்வி முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சி பாடசாலை அதிபர்களுக்கு ஏன் அவசியமாகின்றது?

**(06 புள்ளிகள்)**

**ii.** பாடசாலை அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவ பயிற்சியில் உள்ளடக்க வேண்டிய முக்கியமான **நான்கு** (04) துறைகளைக் குறிப்பிடுக.

**(04 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை அதிபர்களுக்கு கல்வி முகாமைத்துவப் பயிற்சியினை பெற்றுக் கொடுப்பதனால் கல்வி முறைமை பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கினைக் (04)** குறிப்பிட்டு அவற்றில் ஒரு நன்மையினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

13. “தலைமைத்துவம் “இலட்சிய நோக்குடன்” எப்போதும் தொடர்புபட்டதாகும் என்பதுடன் அது தலைவர்களுக்கு அவர்களது ஒழுங்கமைப்புக்கள் பற்றிய நோக்கினையும் நெறிப்படுத்தலையும் வழங்கும்”

   **i.** தலைமைத்துவம் என்பதனால் கருதப்படுவது யாது? **(04 புள்ளிகள்)**

   **ii.** “உருமாற்றுத் தலைமைத்துவம் 21ஆம் நூற்றாண்டின் பாடசாலைத் தலைவர்களுக்கு முக்கியமானதாகும்.” உருமாற்றுத் தலைமைத்துவத்தின் பண்புகள் **நான்கினைக்** (04) குறிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

   **iii.** “நீங்கள் எவ்வாறு ஒரு விளைதிறன்மிக்க தலைவராவீர்கள்” எனும் தலைப்பில் ஒரு விரிவுரை ஒன்றினை நிகழ்த்துமாறு உங்களிடம் கேட்கப்பட்டால் நீங்கள் எவற்றைக் கூறுவீர்கள்? **(08 புள்ளிகள்)**

14. “கல்வி முகாமைத்துவம் தொடர்பிலான பிரச்சினைகள் கல்வியின் இலக்குகளை அடைந்து கொள்வதில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது”

   **i.** இலங்கையின் தற்போதைய கல்வி முகாமைத்துவத் துறையில் நிலவும் பிரச்சினைகள் அல்லது எழுவினாக்கள் **நான்கினைப் (04)** பட்டியற்படுத்துக. **(04 புள்ளிகள்)**

   **ii.** இலங்கையின் கல்வி முகாமைத்துவத் துறையில் அத்தகைய பிரச்சினைகள் தோன்றுவதற்குப் பங்களிப்புச் செய்யும் **நான்கு (04)** காரணிகளைச் சுருக்கமாக விளக்குக. **(08 புள்ளிகள்)**

   **iii.** மேலே 13 – II இல் நீங்கள் குறிப்பிட்ட பிரச்சினைகள் அல்லது எழுவினாக்களில் **ஒன்றினைக்** (01) குறிப்பிட்டு பாடசாலை முகாமைத்துவத்தில் அதன் தாக்கத்தினை பகுப்பாய்வு செய்து அப்பிரச்சினை அல்லது எழுவினாவினை தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைக்குக. **(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -